இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.11.2023) தாய்லாந்தில் 01.12.2023 முதல் 09.12.2023 வரை நடைபெறவுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான உலகத்திறன் விளையாட்டுப் போட்டியில் (IWAS THAILAND) தமிழ்நாட்டின் சார்பில் கலந்து கொள்ளவுள்ள 24 மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகளுக்கு போட்டி நுழைவுக் கட்டணம், விமானக்கட்டணம் உள்ளிட்ட செலவினங்களுக்கு உதவித்தொகையாக தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து ரூ.38.40 இலட்சத்திற்கான காசோலைகளை சென்னை முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, விளையாட்டு அமைப்புகளின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர்

தே.மதியழகன் எம்.எல்.ஏ. இல்ல மணவிழா வரவேற்பு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமை வகித்து சிறப்புரை!

அமைச்சர்கள் துரைமுருகன் - உதயநிதி ஸ்டாலின் - முன்னணியினர் வாழ்த்து!

கிருஷ்ணகிரி, நவ.19- கிருஷ்ணகிரியில் கழகத் தலைவர், தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. மகள் திருமண வரவேற்பு விழா நடைபெறுகிறது

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் மகள் ஷிவானி மணமகன் கௌதம் ஆகியோரது திருமணம் கடந்த 1ம் தேதி பெங்களூருவில் நடைபெற்றது. இதனையடுத்து கிருஷ்ணகிரியில்

வரவேற்பு விழா வருகிற 22.11.2023 - புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு கிருஷ்ணகிரி சுங்கச்சாவடி அருகே உள்ள கலைஞர் அரங்கில் கழக தலைவரும்,

தமிழக முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்த வரவேற்பு விழாவிற்கு கழக பொதுச் செயலாளர் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலை வகிக்கின்றனர். கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சரும் உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி வரவேற்புரை ஆற்ற உள்ளார்

மேலும் அமைச்சர் பெருமக்கள், வாழ்த்துரை வழங்குகின்றனர் .

வரவேற்பு நிகழ்ச்சியில் கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர்கள், தலைமைக் கழக செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள் இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள் கிருஷ்ணகிரி கிழக்கு மேற்கு மாவட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், ஏராளமானோர் கலந்து கொள்கின்றனர் .

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் நன்றியுரை ஆற்றுகிறார்.

விருதுநகர் மாவட்டம் 70-வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா அருப்புக்கோட்டையில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் வீ.ப.ஜெயசீலன் தலைமையேற்றார். இவ்விழாவில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கினார். இவ்விழாவில் விருதுநகர் சட்ட மன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் இராஜலட்சுமி, துணைப் பதிவாளர் வீரபாண்டி, மத்திய கூட்டுறவு வங்கி முதன்மை வருவாய் அலுவலர் இசக்கியப்பன், நகர் மன்ற தலைவர் சிவப்பிரகாசம் சுந்தரலட்சுமி, துணை தலைவர் பழனிச்சாமி, நகர தி.மு.க. செயலாளர் ஏ.கே.மணி மற்றும் கூட்டுறவு சங்கங்களை சார்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை நேருஜி கலையரங்கில் கூட்டுறவுத்துறை சார்பில் நடைபெற்ற 70-வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் பயனாளிகளுக்கு டிராக்டரினை நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார். உடன் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன்கான்,மாவட்ட ஆட்சியர் கார்த்தி கேயன்,ஞானதிரவியம் எம்.பி.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. மாநகராட்சி ஆணையாளர் தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ், துணை மேயர் ராஜ்,கூட்டுறவு துறை இணை பதிவாளர்கள் அழகிரி,உமா மகேஸ்வரி மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 87-வது நினைவு நாளையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் நேற்று (18.11.2023) சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார் மற்றும் துறை உயர் அலுவலர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.